**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

OS.No.55/2021 பெயர் : செங்கோட்டையன் நாள் : 26.06.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா. 1: பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

எனக்கு முத்துசாமி என்கிற முத்து கவுண்டர் எனக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்தார். 1969-ம் தேதிய உயில் படி தாவா சொத்து முத்துசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. நான் கிரையம் பெறுவதற்கு முன்பு உயில் சாசனத்தை படித்துப் பார்த்துதான் கிரையம் பெற்றேனா என்றால், படித்துப் பார்த்தேன். என்னுடைய கிரைய தாரருக்கு உயில் எழுதி வைத்த அவருடைய தாத்தா பெயர் முத்துகவுண்டர் ஆகும். மேற்படி உயிலில் எனக்கு தனிமையில் சர்வ சுதந்திரமாக பாத்தியப்பட்டு, என் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருவதுமாகிய இதனடியில் காணும் சொத்தை பொறுத்து என்ற வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால், சரிதான். மேற்படி கிரைய சாசனத்தில் பழைய க.ச.எண்கள்.5, 6 ஆகியவை குறிப்பிட்டு, அதில் 6-ல் 1 பாகம் என குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி உயிலில் மிக தெளிவாக 2 தாக்குகளாக செக்குபந்தி குறிப்பிட்டு, பு.ஏ.1.7 -1/2 விஸ்தீரணம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான், ஆனால் அது பொதுவில் 6-ல் 1 பாகம் எழுதப்பட்டுள்ளது. பொதுவில் 6-ல் 1

பாகம் என உயிலில் குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால், சரியல்ல. உயிலில் குறிப்பிட்டுள்ள செக்குபந்தியை பற்றி எனது வழக்கில் நான் சொல்லவில்லை என்றால், மொத்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது. உயிலில் உள்ளபடி செக்குபந்தி குறிப்பிடாததற்கான காரணம் பிராதில் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால், இல்லை, பாகம் பிரியவில்லை என்பதால் குறிப்பிடவில்லை. உயிலில் உள்ள வாசகங்கள் தவறு என பிராதில் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால், இல்லை. நான் கிரையம் பெற்ற ஆவணத்தில் உள்ள செக்குபந்தி மற்றும் மூல ஆவணத்தில் உள்ள செக்குபந்தி மற்றும் ரீ.சர்வே எண்கள் ஆகியவற்றின் விபரங்களை பிராதில் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால், இல்லை, நடைமுறைக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்பதால் குறிப்பிடவில்லை. என்னிடம் காட்டப்படுவது தாவா சொத்திற்கு வரைபடம் என்றால், சரிதான், அது **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படுவது புல எண்.278-க்கான பட்டா என்றால், சரிதான், அது **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டாவில் வாதி, பிரதிவாதிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், அனைவரது பெயர்களும் குறிப்பிடப்படவில்லை. நாராயணசாமி, த/பெ.அண்ணாமலை என்பவரது பெயர் பட்டாவில் இல்லை. புல எண்.278-ல் அமைந்துள்ள தார் சாலை எனக்கும், பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியம் இல்லாமல் அனைவருக்கும் பாத்தியப்பட்ட பொது தடம் என்றால்,

சரிதான். ச.எண்.278/18 தார்சாலையின் விஸ்தீரணம் மட்டும் 42 செண்ட் ஆகும் என்றால், சரிதான். நான் கிரையம் பெறுவதற்கு முன்பு இருந்தே அந்த தார் சாலை அமைக்கப் பட்டிருந்தது. அந்த தார் சாலை 42 செண்ட் நீங்கலாக தான் எனக்கும், மற்றவர்களுக்கு சொத்து பாத்தியம் என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படுவது தாவா சொத்து சம்மந்தமான என் முன் கிரையதாரரின் பெயரில் உள்ள பட்டா என்றால், சரிதான், அதனுடன் என் பெயரில் உள்ள பட்டாவும் உள்ளது. அது **பி.வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படுவது என் கிரைய முன்னோர்களின் பெயரில் உள்ள "அ" பதிவேடு என்றால், சரிதான், அது 1 பகுதி ஆகும். அது **பி.வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படுவது என் முன் கிரையதாரர்களின் பெயரில் உள்ள பழைய RSR என்றால், சரிதான். அது **பி.வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் பட்டா எண் மற்றும் அதன் உரிமையாளர்கள் பெயர் கூறப் பட்டுள்ளது என்றால், சரிதான், ஆனால் அந்த ஆவணமே தவறான ஆவணம். என்னிடம் காட்டப்படுவது ரீ.சர்வே படி 2-ம் பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்ட பட்டா என்றால், சரிதான், அது தவறானது. கிரையத்திற்கு முன், முன் கிரையதாரர்களின் பெயரில் வழங்கப்பட்ட பட்டா பற்றியும், 2-ம் பிரதிவாதி பெயரில் பட்டா வழங்கப்பட்ட விபரம் பற்றியும், நான் கிரையம் வாங்கியபோதே தெரியும் என்றால், முன்னோர் பெயரில்

உள்ளது தெரியும், 2-ம் பிரதிவாதி பெயரில் உள்ளது எனக்கு தெரியாது. மேற்படி விபரம் தெரிந்து தான் நீங்கள் கிரையம் பெற்றீர்கள் என்றாலும், தெரியாது என்று நீங்கள் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறீர்கள் என்று சொன்னாலும், சரியல்ல. பிரதிவாதி குடும்பத்திற்கும் 19.02.2019-ம் தேதி ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் தெரிந்த பின்னிட்டு, எப்போது வருவாய் துறை அலுவலரிடம் உட்பிரிவை ரத்து செய்ய புகார் கொடுத்தீர்கள் என்றால், பத்திரம் பற்றிய விபரம் எனக்கு அப்போது தெரியாது, 2020-ல் நான் புகார் கொடுத்தேன். பிரதிவாதிகள் பெயரில் ஏற்கனவே எந்த குறிப்பிட்ட பகுதியை அனுபவித்து வருகிறார்கள், அவர்களது பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் உள்ள விபரம், அவர்கள் குடும்பத்திற்குள் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் முதற்கொண்டு உங்களுக்கு நன்கு தெரியும் என்றாலும், அதை மறைத்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றாலும், சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**